


# குர்பானியின் சட்ட விளக்கங்கள்.

## பேராசிரியர் கம்பம் மௌலவி ஏ. முஹம்மது அபூபக்கர் சிராஜி.

இஸ்லாத்தின் இனிய பெருநாட்களான ஈதுல் பித்ரும், ஈதுல் அழ்ஹாவும் ஒரு முக்கிய தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது.

உண்டு மகிழ்ந்து தான் மட்டும் சுகானுபவத்தில் திளைக்காமல் "முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள்"என்ற தத்துவத்தின் அடிப்படையில்தான் பித்ர் ஸதகாவும், உழ்கியாவும் அமைக்கப்பட்டுள்ளன. இவை இரண்டிலுமே வல்லவனை வணங்கியெழுவதோடு, இல்லானுக்கு வழங்கி, மகிழ்வு பீறிடும் இத்தினங்களில் ஏழைகளும் உண்டு மகிழ்ந்திட வழிவகை செய்துள்ளது இஸ்லாம்.

இப்படிச் சிறந்த இவ்விரு தினங்களில் நம்முன் அடுத்து வருகின்ற ஈதுல் அழ்ஹாவின்போது கொடுக்கப்படுகின்ற உழ்ஹியாவின் சிறப்புக்கள், சட்டங்களை அறிவது அவசியமல்லவா? எனவே உழ்ஹியா குறித்து சற்று ஆராய்வோம்.

"பத்து ரூபாய் மதிப்புள்ள ஒரு பிராணியை குர்பானி கொடுப்பது ஆயிரம் ரூபாய் தர்மம் செய்வதை விட சிறப்பு"

**நூல் : பதாவா குப்ரா, பாகம் - 04, பக்கம் - 332**

குர்பானியை, குர்பானி உழ்ஹிய்யா என இருவகையாகச் சொல்கின்றோம். இரண்டுக்கும் இடையில் என்ன வேறுபாடு? இரண்டும் ஒன்றுதானா?

**குர்பானி**

குர்பானி என்றால் "மா யதகர்ரபு பிஹி இலல்லாஹ்" எந்தச் செயலைக் கொண்டு அல்லாஹ்வை நெருங்க முடியுமோ அச்செயலுக்கு குர்பானி எனப்படும். இது பிராணிகளை அறுத்துப் பலியிடுவதாகவோ, ஏனைய வணக்கங்களாகவோ, தானதர்மங்களாகவோ இருக்கலாம்.

**உழ்ஹிய்யா**

துல்ஹஜ் பிறை 10ஆம் நாளும் ஹனபி மத்ஹபின்படி அதற்கடுத்த இரண்டு நாட்கள் ஆக மூன்று தினங்களும் ஷாபிஈ மத்ஹபின்படி பிறை 10, 11, 12, 13 ஆகிய நான்கு நாட்களும் கால்நடைகளில் நன்மையை நாடி அறுக்கப்படக்கூடிய பிராணிக்கு உழ்ஹிய்யா என்றும் அத்தினத்திற்கு யவ்முல் அழ்ஹா,ஈதுல் அழ்ஹா என்றும் கூறப்படும்.

குர்பானி பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலம் தொடுத்து நடைபெறுகிறது. ஆனால் உழ்ஹிய்யா கலீலுல்லாஹ் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலமே நிலைநிறுத்தப்பட்டது.எனவே உழ்ஹிய்யா இப்றாஹீம் நபியவர்களது சுன்னத்தாகவும் அமைந்துள்ளது.

**குர்பானியின் சிறப்பு**

“மிகச் சிறந்த நாளில் மனிதன் செய்கின்ற நற்செயல்களில் இறைவனுக்கு விருப்பமானது குர்பானி கொடுப்பதாகும். நிச்சயமாக குர்பானி அதன் முடிகள், கொம்புகள், குளம்புகளுடன் கியாமத் நாளில் குர்பானி கொடுத்தவனைத் தேடி வருகிறது. அதன் இரத்தம் பூமியில் விழுவதற்கு முன்னர் அல்லாஹ்வை அடைந்து விடுகிறது.“

**அறிவிப்பவர் : ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா**

**நூல் : திர்மிதி**

“குர்பானி கொடுக்கப்படுகின்ற பிராணிகளின் ஒவ்வொரு ரோமத்திற்கு(ப் பகரமாக) ஒரு நன்மையை அல்லாஹ் வழங்குகிறான் (நூல் :திர்மிதி) என்ற நபிமொழிகளும்,

“குர்பானி கொடுப்பவனுக்குரிய கூலி என்ன?“ என நபி தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் கேட்டபோது,

அல்லாஹ் சொன்னான் “ஒவ்வொரு ரோமத்திற்குப் பத்து நன்மைகள் கிடைப்பதோடு, பத்துப் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. பத்து அந்தஸ்துகள் உயர்த்தப்படுகின்றன. குர்பானி கொடுத்த பிராணியின் வயிறு கிழிக்கப்படுவது மூலமாக கப்று பிளக்கும்போது அவன் அச்சமற்றவனாக எழுப்பப்படுகின்றான். குர்பானி இறைச்சியின் ஒவ்வொரு துண்டுக்குப் பகரமாக சுவனத்தில் ஒரு பறவை பறக்கிறது. ஒவ்வொரு ரோமத்திற்கும் ஒரு மாளிகையும், ஒரு ஹூருல்ஈன் கண்ணழகியும் வழங்கப்படுவான். சிராத்துல் முஸ்தகீம் பாலத்தைக் கடக்கும் வகையில் குர்பானி பாவங்களையும். முஸீபத்துகளையும் அழித்து விடுகிறது. ஒரு முஃமின் தன்னையே அர்ப்பணிப்பது போன்றதாகும். குர்பானி (நூல் - குன்யா, பாகம் - 02,பக்கம் - 32) என்ற கௌதுகள் நாயகம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்றும் குர்பானியின் சிறப்பினை விளக்கப் போதுமானது.

## குர்பானியின் சட்டங்கள் (ஹனபீ)

**குர்பானி யாருக்குக் கடமை**

இருநூறு திர்ஹம் அதாவது ஏறத்தாழ அறுநூறு கிராம் வெள்ளியின் கிரயத்திற்கு பெறுமான பொருளுக்கு குடியிருக்கும் வீடு, அணியும் ஆடை, கடன்கள் போக (எந்தப் பொருளாக இருந்தாலும், நிலமாக இருந்தாலும், கால்நடையாக இருந்தாலும்) இருந்து அவன் என்பது கிலோ மீட்டர் பிரயாணம் செல்லாமல் ஊரில் தங்கியிருந்தால் அவன் மீது குர்பானி வாஜிபாகும். (பெண்ணாக இருந்தாலும் சரி, சிறியவனாக இருந்தாலும் சரி)

**நூல் : ரத்துல் முக்தார், பாகம் - 05, பக்கம் - 273**

குர்பானி கொடுக்க வசதியற்றவர்கள் குர்பானி கொடுப்பதாக எண்ணிக் கொண்டு கோழி, சேவலை அறுப்பது மக்ரூஹ்

**நூல் : ஆலம்கீரி, குலாஸா பக்கம் - 332**

**குர்பானியின் நேரம்**

துல்ஹஜ் பிறை 10 ஸுபுஹ் உதயமாவது முதல் பிறை 12இன் சூரியன் மறையும் வரை, இம்மூன்று நாட்களும் ஒருவன் பிரயாணத்தில் இருந்தால் குர்பானி வாஜிபல்ல. மூன்றாவது நாள் கடைசி நேரத்தில் ஊருக்கு வந்தாலும் குர்பானி வாஜிபாகும்.

**நூல் : ஆலம்கீரி, பாகம் - 05, பக்கம் - 324**

இதேபோல வசதியற்றவன் குர்பானி கொடுக்கும் நிய்யத்தில் பிராணியை விலைக்கு வாங்கிவிட்டாலும் அவன்மீது குர்பானி வாஜிப் ஆகும்.

**நூல் : ஆலம்கீரி, பக்கம் - 323**

குர்பானி வாஜிபானவன் மூன்று நாட்களும் குர்பானிகொடுக்கவில்லையானால் குர்பானி கொடுக்கும் பிராணியை அறுக்காமல் தர்மம் செய்துவிட வேண்டும். அறுத்தல் என்பது குறிப்பிட்ட

தினங்களில்தான் வணக்கமாகக் கருதப்பட்டுள்ளது. எனவே அறுக்காமல் ஸதகா செய்துவிட வேண்டும்.“

**நூல் : ஆலம்கீரி, பக்கம் - 326, பக்கம் - 329**

குர்பானி கொடுக்கப்படக்கூடிய நாட்களில் இரவு நேரங்களில் குர்பானி கொடுப்பது மக்றூஹ்.

**நூல்:ஆலம்கீரி, பக்கம் - 328**

கிராம வாசிகள் சூரியன் உதயமான பின்னரும் பட்டணவாசிகள் பொருநாள் தொழுகைக்குப் பின்னரும் குர்பானி கொடுப்பது கடமை.

**நூல் : ளகீரிய்யா, ஆலம்கீரி பக்கம் - 327**

நகரவாசிகள் தொழுகைக்கு முன்னர் கொடுத்தாலும், தொழுகை நடந்துகொண்டிருக்கும்போது கொடுத்தாலும் குர்பானி நிறைவேறாது. அவ்வாறு கொடுத்தால் பகரமாக வேறு குர்பானி கொடுக்கவேண்டும்.

**நூல் : பதாஇ.ஃ, ஆலம்கீரி பக்கம் - 327**

பிறை பத்து அன்று ஏதாவது காரணத்தால் ஈதுத் தொழுகை நடைபெறவில்லையென்றால் சூரியன் உச்சிப் பொழுதை தாண்டும் வரை குர்பானி கொடுக்கக் கூடாது. மறுநாள் பிறை பதினொன்று அன்று ஈதுத்தொழுகைக்கு முன்பே குர்பானி கொடுப்பது கூடும்.

**நூல் : முஹீத்துஸர்கஸி, ஆலம்கீரி பக்கம் - 328**

**எவற்றை குர்பானி கொடுக்கலாம்?**

செம்மறி ஆடு, வெள்ளாடு, பசு, காளை, எருமை, ஒட்டகம் போன்றவற்றை குர்பானி கொடுக்கலாம். ஆடு,மாடு, ஒட்டகம் ஆகிய இம்மூன்று வகைகளும் காட்டில் வசிப்பவைகளாக இருந்தால் குர்பானி கொடுப்பது கூடாது.

**நூல் : அலம்கீரி, பக்கம் 329**

வெள்ளாடு ஒரு வருடமும், செம்மறியாடு ஆறு மாதத்திலேயே ஒரு வருட வெள்ளாட்டைப் போன்று வளர்ந்து இருந்தாலும், மாடு இரண்டு வருடம் பூர்த்தியானதும், ஒட்டகம் ஐந்து வருடம் பூர்த்தியானதும் அதற்கு மேல் உள்ளவைகளையும் குர்பானி கொடுக்க வேண்டும். ஆடு ஒரு நபருக்காகவும், மாடு ஒட்டகம் ஏழு நபருக்கோ அல்லது அதைவிடக் குறைந்தவர்களுக்காகவோ கொடுக்கலாம். ஆனால் ஏழு பேர்களும் அல்லாஹ்வின் பொருத்தத்தையே நாடவேண்டும். அந்த நாட்டம் சிலருக்குக் குர்பானியாகவும், சிலருக்கு அகீகாவாகவும், சிலருக்கு ஹஜ்ஜில் குற்றப் பரிகாரமாகவும் இருக்கலாம். ஆனால் ஏழு பேர்களில் இறைச்சிக்காக ஒருவர் சேர்ந்தால் அந்த ஏழு நபர்களின் குர்பானியும் கூடாது.

**நூல் : ஆலம்கீரி, பக்கம் 337**

கொம்பு அறவே இல்லாதவை, இலேசாக ஒடிந்தவை, காய் அடிபட்டவை, பல் அறவே இல்லாதவை,ஆனால் மேயக்கூடியவை, பைத்தியம் பிடித்தவை, காது நேராகக் கிழிக்கப்பட்டவை போன்றவற்றை குர்பானி கொடுக்கலாம்.

குருடானவை, அறவே நடக்க முடியாதவை காதுகள் துண்டிக்கப்பட்டவை, காதுகள் அறவே இல்லாதவை,வால், பித்தட்டு துண்டிக்கப்பட்டவை, மேயத் தெரியாதவை, மூக்கு துண்டிக்கப்பட்டவை, மடி துண்டிக்கப்பட்டவை, கன்றுக்கு பால் கொடுக்க முடியாதவை, பால் வற்றியவை, நாக்கு இல்லாதவை,நஜீஸைத்தவிர மற்றதை சாப்பிடாதவை ஒரு கால் துண்டிக்கப்பட்டவை ஆகியன குர்பானி கொடுக்கக்கூடாது.

காதின் பிற்பகுதி துண்டிக்கப்பட்டவைகளும், காதின் ஓரம் துண்டிக்கப்பட்டவைகளும், காதில் ஓட்டை உள்ளவைகளும், காது கிழிக்கப்பட்டவைகளும் மக்ரூஹ்.

**நூல் : ஆலம்கீரி, பக்கம் - 330**

குர்பானிக்காக வழங்கப்பட்ட பிராணி இறந்து விட்டால் வசதியுள்ளவன் வேறு பிராணி வாங்கி குர்பானி கொடுக்க வேண்டும். வசதியற்றவனாக இருந்தால் தேவையில்லை.

**நூல் : ரத்துல் முஹ்தார், பக்கம் - 384**

குறையற்றதாக வாங்கி, அதனை அறுக்கச் செல்லும்போது கால் ஒடிந்து விட்டால் அதனை கொடுக்கலாம்.

**நூல் : பதாயி ஃ, பக்கம் - 382**

எல்லா பிராணிகளை விடவும், ஆடே சிறந்தது காளையைவிட பசுவே மேலானது.

**நூல் : ஆலம்கீரி, பக்கம் 332**

**குர்பானி இறைச்சியை யாருக்கு கொடுக்கலாம்?**

பொதுவாக அறுக்கப்பட்ட பிராணியின் இறைச்சியை குர்பானி கொடுப்பவன் உண்பதும், பிறருக்குக் கொடுப்பதும் முஸ்தஹப். எனினும் அதனை மூன்று பாகங்களாகப் பிரித்து ஒன்றை தர்மம் செய்வதும்,ஒரு பாகத்தை உறவினர்கள் நண்பர்களுக்கு வழங்குவதும், ஒரு பாகத்தை தனக்காக வைத்துக்கொள்வதும் நல்லது. ஏழை, பணக்காரன், முஸ்லிம், முஸ்லிமல்லாதார் என்ற பாகுபாடின்றிக் கொடுக்கலாம்.

**நூல் : கியாதிய்யா, பக்கம் 333**

அனைத்தையும் தர்மம் செய்வதும், தானே எடுத்துக் கொள்வதும் ஆகுமென்றாலும், அவனது குடும்பம் பெரியதாகவும், ஏழைனளாகவுமிருந்தால் மொத்தத்தையும் தானே எடுத்துக் கொள்வதே ஏற்றமாகும்.

**நூல் : பதாயி ஃ, பக்கம் - 332**

சட்டம் தெரியாமல் குர்பானி கொடுக்காது அப்பிராணியை விற்று விட்டால் அதன் கிரயத்தை அப்படியே தர்மம் செய்து விட வேண்டும். குர்பானி கொடுப்பதற்குண்டான மூன்று தினங்களுக்குப் பின்னர் அறுத்தால் அதன் மாமிசம் முழுவதையும் தர்மம் செய்துவிட வேண்டும். அவற்றில் கொஞ்சத்தை சாப்பிட்டு விட்டால் சாப்பிட்ட அளவுக்குள்ள கிரயத்தை தர்மம் செய்ய வேண்டும்.

**நூல் : ஆலம்கீரி, பக்கம் 329**

நேர்ச்சை மூலம் குர்பானி வாஜிபானால், அல்லது இறந்தவர்களுக்காக குர்பானி கொடுத்தால் முழு இறைச்சியும் ஏழைகளுக்கு தர்மம் செய்துவிடவேண்டும். குர்பானி கொடுத்தவனோ அல்லது யாருக்காக கொடுக்கப்பட்டதோ அவர்கள் ஏழைகளாயினும் சரியே!

**நூல் : தப்யீன், பக்கம் - 333**

**குர்பானியின் முஸ்தஹப்புகள்**

குர்பானி கொடுக்கும் பிராணிகளை, அவை மாடாக இருந்தால் 20 நாட்களும், ஆடாக இருந்தால் 10நாட்களும் கட்டிப்போட வேண்டும்.

**நூல் : பதாயி ஃ, பக்கம் - 333**

குர்பானி கொடுக்க நாடிய பின்னர் பால் கறப்பது மக்ரூஹ். கறந்து விட்டால் தர்மம் செய்து விடவேண்டும்.குர்பானி தோலை தன் உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளலாம். அல்லது தர்மம் செய்து விடவேண்டும்.

குர்பானியின் பிராணி குட்டி போட்டால் அதனை அறுத்தோ அல்லது அப்படியே தர்மம் செய்ய வேண்டும்.விற்று விட்டால் விலையை தானம் செய்ய வேண்டும்.

**நூல் :ஆலம்கீரி, பக்கம் - 334**

## குர்பானியின் சட்டங்கள் (ஷாபிஈ)

துல்ஹஜ் பிறை 10ஆம் நாளும் அதற்கடுத்த மூன்று தினங்களும் அதாவது பிறை 13 அன்று சூரிய அஸ்தமனம் வரை குர்பானி கொடுக்கலாம்.

இத்தினங்களுக்குரிய செலவினங்கள் போக குர்பானி கொடுக்க சக்தியுள்ளவனுக்கு குர்பானி கொடுத்தல் சுன்னத் முஅக்கதாவாகும்.

செம்மறி ஆடாக இருந்தால் ஒரு வருடமும், அல்லது பல்விழுந்ததாக இருக்க வேண்டும். மற்றவை ஹனபீ மத்ஹபைப் போன்றே!

**நூல் : இஆனா, பாகம் - 04, பக்கம் - 386**

பெருநாள் தொழுகைக்கு முன்னர் குர்பானி கொடுக்கக் கூடாது. குர்பானிக்குரிய காலக்கெடு முடிந்து விட்டால் அப்பிராணியை அறுத்து குர்பானி கொடுப்பது வாஜிபாகும். இது 'களா'வாக நிறைவேறும்.

**நூல் : இஆனா, பக்கம் - 387**

பலவீனமானவைகள், வால், காது அறுந்தவை, கண் பொட்டையானவற்றைக் கொடுப்பதுவும் கூடாது.

**நூல் : பதாவா ரமலீ**

குர்பானியின் இறைச்சியை ஏழை பணக்காரர்களுக்குக் கொடுக்கலாம். ஆனால் முஸ்லிம் அல்லாதவருக்குக் கொடுக்கக் கூடாது. குர்பானியின் இறைச்சியை இடம் மாற்றிக் கொடுப்பதுவும் கூடும்.

**நூல் : இஆனா, பக்கம் - 390, 391**

நேர்ச்சைக்காக குர்பானி கொடுக்கப்பட்ட பிராணியின் முழு இறைச்சியையும் தானமாகக் கொடுத்து விட வேண்டும். ஒரேயொருவருக்கு முழுவதையும் கொடுப்பதும் கூடும்.

குறையுள்ள பிராணியை அல்லது குறிப்பிட்ட காலக்கெடு பூர்த்தியாகாத பிராணியை நேர்ச்சை செய்திருந்தால் அதை அப்படியே அறுக்க வேண்டும். ஆனால் அது உழ்ஹிய்யாவாக ஆகாது

**நூல் : இஆனா, பக்கம் - 389**

உழ்ஹிய்யா கொடுப்பவர் துல்ஹஜ் பிறை கண்டது முதல் உழ்ஹிய்யா கொடுப்பது வரை முடி,நகங்களை கத்தரிக்காமல் இருப்பதும், தனது உழ்ஹிய்யாவை தானே அறுப்பதும் சுன்னத்தாகும்.

**நன்றி : வஸீலா - 01.08.1987**

எமது வெப்சைட்கள்


# http://kalmunaijamia.blogspot.com/

# jmhac.klsl@gmail.com

# swjf786@gmail.com